2007 ஏப்ரல் 24] [திரு. என்கேகே.பி. ராஜா]

செட்டில்மென்ட் செய்யப்பட்டு அரசின்மூலமாகப் பணம் அவர்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது. சில நடைமுறைச் சிக்கல்களின் காரணமாக நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால் நீதிமன்ற ஆணையின்படிதான் இந்த அறிவிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், வருகிற காலங்களில் இந்த அரசு, உயர் நீதிமன்றத்திலே இருக்கிற இந்த வழக்கினுடைய இறுதித் தீர்ப்பின் அடிப்படையிலேதான் ஒரு முடிவு எடுக்கும் என்கிற அரசினுடைய நிலையை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 கூட்டுறவு நூற்பாலைகள் இந்தப் பஞ்சையெல்லாம் வாங்கிப் பயன்படுத்தி இருக்கின்றன. அவற்றில் இப்போது 5 ஆலைகள் மட்டுமே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய நூற்பாலைகளைத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள்—குறிப்பாக, வேலூர், அரியூர் கூட்டுறவு நூற்பாலையை அமைச்சர் அவர்கள் திறக்க முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மானியக் கோரிக்கையிலேயே இதைப் பற்றிச் சொல்லப்பட்டது. நடந்துகொண்டிருக்கிற 5 நூற்பாலைகளையும் நல்ல முறையிலே மறு சீரமைப்புச் செய்து நடத்துகிற நிலையும், அதுபோல் தொடர்ச்சியாக, இருக்கின்ற நூல் ஆலைகள் குறித்து இந்த அரசு என்ன செய்யலாம் என்பதைத் தலைவர் கலைஞர் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின்

[திரு. சி. ஞானசேகரன்] [2007 ஏப்ரல் 24

நாற்பத்தாறாவது முதல் நாற்பத்தொன்பதாவது வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

முற்பகல் 11-40

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது முதல் நாற்பத்திரண்டாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 21—நெடுஞ்சாலைகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2007-2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21—நெடுஞ்சாலைகள் துறை, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,755,75,95,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 332, திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: